விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 074 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 19 செவ்வாய்க்கிழமை (03.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அவசர காலநிலை மேலும் நீடிப்பு விசேட வர்த்தமானி வெளியீடு



(கொழும்பு)

அவசரகால நிலையை மேலும் நீடிக்கும் அதி விசேட வர்த்தமானி ஜனாதிபதியால் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு, அவசர கால நிலையை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த அமைச் 15ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க – இஸ்ரேல் தாக்குதல் 550க்கும் மேற்பட்டோர் ஈரானில் மரணம்

(தெஹ்ரான்)

அமெரிக்க மற்றும் இஸ்ரேலியத் தாக்குதல்களால் ஈரானில் 550க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்படி, கடந்த சனிக்கிழமை போர் தொடங்கியதில் இருந்து ஈரானின் 131 நகரங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 15ஆம் பக்கம் பார்க்க

# பற்றி எரிகிறது மத்திய கிழக்கு மாறி மாறி ஏவுகணைத் தாக்குதல்

(தெஹ்ரான்)

ஈரானுக்கு எதிரான இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தாக்குதலைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. (02ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.குடத்தனையில் இளைஞனின் சடலம் மீட்பு

(கரணவாய்)

யாழ்.குடத்தனை வலிக்கண்டிப் பகுதியில் தனிமையில் இருந்த இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் ஜதுர்சன் (வயது-29) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். 15ஆம் பக்கம் பார்க்க

## ஈரானுக்கு ஆதரவு சீனா அறிவிப்பு

(பீஜிங்)

மத்திய கிழக்கில் போர் உக்கிரமடைந்து வரும் நிலையில் ஈரானுக்கு ஆதரவு வழங்குவதாக சீனா கருத்து வெளியிட்டுள்ளது.

ஈரானின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப் 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கான விசா காலம் இரு வாரங்களுக்கு நீடிப்பு

(கொழும்பு)

விமானப் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் விசா காலத்தை இரண்டு வாரங்களுக்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் 15ஆம் பக்கம் பார்க்க

## போதியளவு எரிபொருள் கையிருப்பு அவசியம் ஏற்பட்டால் QR பயன்பாடு

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர்



(கொழும்பு)

நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் இருப்பதாகவும் தேவையேற்படின் QR முறையைப் பயன்படுத்தலாம் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளி 02ஆம் பக்கம் பார்க்க

## இஸ்ரேல் பிரதமரின் அலுவலகம் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்

(ரெல் அவிவ்)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகத்தைக் குறிவைத்து ஈரான் பாரிய ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஈரான் உயர்மட்டத் தலைவர் அயதுல்லா அலி காமேனி 15ஆம் பக்கம் பார்க்க




## காமேனியின் மனைவியும் உயிரிழந்ததாக அறிவிப்பு




(தெஹ்ரான்)

ஈரானில் கொல்லப்பட்ட அதி உயர் தலைவர் அயதுல்லா அலி காமேனியின் மனைவியும் உயிரிழந்ததாக ஈரானிய ஊடகங்கள் அறிவித்துள்ளன.

அமெரிக்க - இஸ்ரேலியத் தாக்குதலில் 15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா[illegible]க்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகமானது சுமார் 25 வருடங்களின் பின் இடம்பெறவுள்ளதை முன்னிட்டு கும்பாபிஷேகத்துக்கான பந்தல்கால் நாட்டும்

# ஓய்வூதியர்களுக்கான இலவச கண் பரிசோதனை

(கரவெட்டி)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கரவெட்டி பிரதேச கிளையின் ஏற்பாட்டில், ஓய்வூதியர்களுக்கான விசேட கண் பரிசோதனை முகாமும் இலவசக் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

பார்வைக் குறைபாடுகளினால் சிரமப்படும் ஓய்வூதியர்களுக்கு உதவும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஓய்வூதியர்கள் கரவெட்டி பிரதேச செயலக ஓய்வூதியர் நிதிய பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு தி.வரதராசன் 077 711 1007 கி. ரவிக்குமார் 077 361 8649 ஜெயானந்தகுமார் 077 717 8161 வே.சிவசிதம்பரம் 077 325 2081 ஆகிய உறுப்பினர்களை வட்ஸ் அப் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

இம்முகாமில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானவர்களே அனுமதிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்கள் தாமதமின்றி முன்னதாகவே தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். (ம-7,60)

# மதுபானம் விற்பனை தாவடியில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம்-சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவடி காளிகோவிலுக்கு அண்மித்த பகுதியில் சட்டவிரோதமாக மதுபானத்தை விற்பனை செய்த நபர் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 23 கால் சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் மாவா, ஐஸ் போதைப்பொருள் போன்றவற்றை விற்பனை செய்த மூவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7)

## போதியளவு...

யிட்ட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் சந்தர்ப்பங்களில் மட்டுமே QR முறையைப் பயன்படுத்தி விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்.

தற்போது நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதால், QR முறையைப் பயன்படுத்த வேண்டிய எவ்விதத் தேவையும் இல்லை என அவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத சூழல் உருவானால் மட்டுமே அதனைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றைய தினமும் (02) வழமை போன்று எரிபொருள் விநியோகம் தடையின்றி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9.45 மணி வரை:

டீசல் - 29 இலட்சத்து 25 ஆயிரத்து 349 லீற்றர்

ஒக்டேன் 92 பெற்றோல் - 29 இலட்சத்து 4 ஆயிரம் லீற்றர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (01) சுமார் 30 இலட்சம் லீற்றர் டீசலும் 39 இலட்சம் லீற்றர் பெற்றோலும் சந்தைக்கு விடுக்கப்பட்டதாக அவர் புள்ளிவிபரங்களுடன் விளக்கமளித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என அநாவசியமாகப் பதற்றமடைந்து மக்கள் வரிசைகளில் காத்திருப்பது வருத்தமளிப்பதாகத் தெரிவித்த தலைவர், தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என வலியுறுத்தினார்.

தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார்.

அனுமதிப்பத்திரமின்றி வீடுகளில் எரிபொருளைப் பதுக்கி வைப்பது சட்டவிரோதமானது மற்றும் ஆபத்தானது என அவர் எச்சரித்துள்ளார்.

இவ்வாறு பதுக்குபவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் நேற்றுமுன்தினம் இது தொடர்பாகச் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் பதுக்கல் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)


# வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு

- சமையல் உதவியாளர்
- பணியாளர் (Waiter)
- பாத்திரம் சுத்தப்படுத்துபவர்(Dish Washer)

தேவை. ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

தொடர்பு : 075 049 2719

(C-5107)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திருமதி நளாயினி சஞ்ஜீபன்**
பிரதி அதிபர் [ B.Ed(English), MEd (second upper), SLPS III ]




**திரு. சிவரத்தினம் சிவகுமார்**
ஆசிரியர் [ B.Ed(English), MEd (second Lower) ]

யாழ். பல்கலைக்கழக 40 வது பட்டமளிப்பு விழாவில் கல்வியல் முதுமாணிப்பட்டம் பெற்ற எமது பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர் இருவருக்கும் எமது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் மென்மேலும் பல பட்டங்களைப் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் - **ஆசிரியர் நலன்புரிக் கழகம் யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை**


## பற்றி...

ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பதற்கான திட்டங்களைப் பரிசீலித்து வருவதாக வளைகுடா நாடுகள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சவுதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா ஒத்துழைப்பு சபை இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈரானால் ஏவப்பட்ட ஒன்பது பாலிஸ்டிக் ஏவுகணைகள், ஆறு குரூஸ் ஏவுகணைகள் மற்றும் 148 ட்ரோன்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் (UAE) வான் பாதுகாப்புப் படையினரால் வெற்றிகரமாக இடைமறிக்கப்பட்டதாக அதன் பாதுகாப்பு அமைச்சகம் (MoD) தெரிவித்துள்ளது.

ஈரானியத் தாக்குதல்கள் தொடங்கியதிலிருந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பாதுகாப்புத்துறை நாட்டை நோக்கி ஏவப்பட்ட 174 பாலிஸ்டிக் ஏவுகணைகள் கண்டறியப்பட்டதாகவும் அவற்றில் 161 அழிக்கப்பட்டதாகவும் 13 கடலில் விழுந்ததாகவும் தெரிவித்துள்ளது.

மொத்தம் 689 ஈரானிய ட்ரோன்களும் கண்டறியப்பட்டன. 645 இடைமறிக்கப்பட்டன. அதே நேரத்தில் 44 நாட்டின் எல்லைக்குள் தரையிறங்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும் 68 பேர் சிறு காயங்களுக்கு ஆளானதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், தனது ஆயுதப் படைகள் இரண்டு ஈரானிய போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும் நாட்டை குறிவைத்து ஏவப்பட்ட பல ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை இடைமறித்ததாகவும் கட்டார் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று அறிவித்தது.

ஈரானில் இருந்து வந்த இரண்டு சுகோய் Su-24 போர் விமானங்களை கட்டார் அமிரி விமானப்படை சுட்டு வீழ்த்தியதாக அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. விமானப் பாதுகாப்புப் படைகள் ஏழு பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்ததாகவும் ஐந்து ட்ரோன்கள் விமானப்படை மற்றும் அமிரி கடற்படைப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அது மேலும் கூறியது.

அச்சுறுத்தல்கள் கண்டறியப்பட்ட உடனேயே செயற்படுத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களின்படி அனைத்து ஏவுகணைகளும் அவற்றின் இலக்குகளை அடைவதற்கு முன்பே இடைமறிக்கப்பட்டதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் இறையாண்மை மற்றும் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கும் எந்தவொரு வெளிப்புற அச்சுறுத்தலுக்கும் உறுதியாகப் பதிலளிப்பதற்கும் கட்டார் ஆயுதப் படைகள் முழுத் திறன்களைக் கொண்டுள்ளன என்றும் அமைச்சகம் வலியுறுத்தியது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈவினை மதுரையம்பதி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த தெய்வீக பெருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 20 நாட்கள் உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவங்களில் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 1 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (8)

## மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)


சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமானது வேலணைப் பிரதேசசபையுடன் இணைந்து அண்மையில் வேலணைப் பிரதேசத்தில் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வைத்திருந்தது.

அவுஸ்ரேலியா charity hand அமைப்பின் நிதிப் பங்களிப்பில் மேற்படி மாணவர்களுக்கான உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# வேறு சட்டங்களை முன்மொழியாது

# பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குங்கள்

## மன்னார் மறைமாவட்ட ஆயர்



**(மன்னார்)**

**பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் தெரிவித்துள்ளார்.**

இதற்குப் பதிலாக வேறு சட்டங்களை முன் மொழியாது, மக்களின் உணர்வுகளைப் புரிந்து மக்களோடு பயணிக்க அரசு தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மறைமாவட்ட மக்களுக்கு எழுதிய தவக்கால திருமடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சி பீடமேறிய இன்றைய அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருந்த பல எதிர்பார்ப்புகள், இன்றும் எதிர்பார்ப்புகளாகவே உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, பல பிரச்சினைகளுக்கு இன்றைய அரசாங்கம் தீர்வுகளைத் தராமல் காலத்தை தாமதித்துச் செல்வது மன வருத்தத்திற்குரியது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தற்போது கடற்றொழில் சமூகம் எதிர்நோக்கும் பாரிய தொழில் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறையோடு விரைந்து செயலாற்ற வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் கோரிக்கை விடுத்துள்ளார். (8)

## பொலிஸ் அணிவகுப்பு நிகழ்வு

(கரணவாய்)

யாழ் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2026 ஆம் ஆண்டிற்கான அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனை நிகழ்வும் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது.

மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையில் பொலிஸ் நிலைய வளாகத்தில் ஆரம்பமான நிகழ்வில் காங்கேஷன்துறைக்கு பொறுப்பாக இருக்கும் பொலிஸ் அத்தியட்சகர், அணி வகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணி வகுப்பு மரியாதையை பார்வையிட்டதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுகாதார முறைகள் பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வள பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார். (8-60)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மேல் மருவத்தூர் பங்காரு அம்மா அடிகளின் அவதார தினத்தை முன்னிட்டு ஊரெழு கணேச வித்தியாசாலையில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சி. கணேசநாதனும் (ஜே.பி), சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி சாரதா ரவிச்சந்திரனும் கலந்து கொள்கின்றனர்.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை குப்பிழானை சேர்ந்த கலைச்செல்வி -திருக்குமார் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர். (8)



யாழ்ப்பாணம் - வண்ணை கன்னாதிட்டி காளிஅம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்றைய தினம் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:சிவசாந்தன்)

## மருதனார்மடம் பகுதியில் தீப்பற்றி எரிந்த மோட்டார் சைக்கிள்!

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் பகுதியில் நேற்றைய தினம் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்தமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

## காங்கேசன்துறை-நாகபட்டினம் கப்பல்சேவை மீண்டும் ஆரம்பம்

(அராலி)

காங்கேசன் துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையானது எதிர்வரும் 6 ஆம் திகதி அன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுபம் கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல் சேவையானது அசாதாரண காலநிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் குறித்த கப்பல் சேவையானது மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வழமைபோல் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் குறித்த கப்பல் சேவையானது இடம்பெறும்.

www.sailsubham.com என்ற இணைத்தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 021 222 4647, 011 764 2117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொள்வதன் மூலமாகவோ பயணச் சீட்டுகளை பதிவுசெய்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (8-104)

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு

## புதிய நீர் விநியோகத் திட்டம் 956 மில்லியன் ஒதுக்கீடு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் 956 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய நீர் விநியோகத் திட்டத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜெ. றஜீவன், இ. அர்ச்சுனா கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற கூட்டத்தின் போதே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான் குளம், வன்னேரிக்குளம், பிரமந்தனாறு, புன்னை நீராவி, தர்மபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு புதிதாக குழாய்கள் பதித்து நீர் விநியோகத் திட்டத்தை விரிவுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்காலத்தில் கிளிநொச்சியில் அமையவுள்ள பாரிய கிளிநொச்சி குடிநீர் விநியோக திட்டத்திற்கான மூல நீரை திருவையாறு ஏற்று நீர்பாசனத்திற்கு நீரை பெறுகின்ற இரணைமடு குளப் பகுதியிலிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுச் செய்திகள்

## ரி-20 உலகக்கிண்ண தொடர்
## சஞ்சு சாம்சன் அதிரடி ஆட்டத்தால் அரையிறுதிக்கு தகுதி பெற்றது இந்தியா!



**ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 'சூப்பர் 8' சுற்று போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயித்த 196 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துரத்திய இந்திய அணி, 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.**

இந்தியாவின் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் ரொஸ்டன் சேஸ் அதிகபட்சமாக 40 ஓட்டங்களைப் பெற்றார். அதேபோல், ரொவ்மன் பவல் 34 ஓட்டங்களுடனும், ஜேசன் ஹோல்டர் 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பின்னர் பதிலுக்கு 196 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 19.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்ட சஞ்சு சாம்சன் வெறும் 50 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களைக் குவித்து அணியை அரையிறுதிக்கு அழைத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி
## நடேஸ்வரா கனிஷ்ட பாடசாலை சம்பியன்



40 வருடங்களின் பின்னர் பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளனர்.

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கம் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் 10 வயதுப் பிரிவினருக்கான Future Soccer Kings சவால் கிண்ணத்திற்கான காற்பந்தாட்ட தொடர் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதல் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய அணி இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியை 4:0 என்ற கோல் கணக்கிலும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை 4:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (3-90)



முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட செம்மலை மகா வித்தியாலய மாணவர்களின் 2026 ஆம் ஆண்டு இல்ல மெய்வன்மை திறனாய்வு போட்டியினை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலான மரதனோட்டப் போட்டி நேற்று திங்கட்கிழமை பாடசாலையின் முதல்வர் சிங்கராசா மோகனதாசன் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்றிருந்தது. (பெ.ம-சதீஸ்)

## வடமராட்சி கால்பந்தாட்டத் தொடர்
## இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி



கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி முதல் பாதியாட்டத்தில் அபி மற்றும் ஆர்த்திகன் ஒவ்வொரு கோல்களை பதிவு செய்ய 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியினரின் ஆதிக்கம் மேலோங்க அபி, ஆர்த்திகன் மற்றும் சர்மிலன் ஆகியோர் ஒவ்வொரு கோல்களை பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


அதற்கமைய, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் நீண்ட வரிசைகளுக்கு மத்தியில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, பீப்பாய்கள், அதிக கொள்ளளவான போத்தல்கள் ஆகியவற்றில் எரிபொருளை நிரப்பக்கூடாது என, நிரப்பு நிலையங்களுக்கு ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புகளை மீறுவோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என, துறைசார் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், எரிபொருளைப் பதுக்குவோர் தொடர்பில் நாடளாவிய ரீதியில் புலனாய்வுத் துறையினர் சோதனைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் கந்தையா திருநீலகண்டன் ஞாபகார்த்த நினைவுப் பேருரை நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 03 - 1947 | மறைவு 02 - 03 - 2026



### திருமதி. துரை இராசமணி

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் குமர கோட்டத்தை வதிவிடமாவும் கொண்ட திருமதி. துரை இராசமணி அவர்கள் 02.03.2026நேற்று திங்கட்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பொன்னம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரை (பிரபல வர்த்தகர், ஹட்டன் டிக்கோயா) அவர்களின் பாசமிகு மனைவியும், சரவணபவன்(பவன்-வர்த்தகர்), தனராணி(சுவிஸ்), Lion. பிரணவச் செல்வன்(JP, Director of new global business systems), அபிராமி மணாளன் (manager of north power electricals) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற தவமணியின் அன்புச் சகோதரியும், சதீஸ்கலா, பிரேமதாசன்(சுவிஸ்), கௌரி(pharmasist) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அருமைநாதன்(ஓய்வு நிலை உதவி அதிபர்), லிங்கநாதன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயும், தர்மினி(சுவிஸ்), தர்சிகன் (சுவிஸ்), வைதீசன்(சுவிஸ்), நியந்தன்(கனடா), கஜானன்(north power electricals), நிலானி, நிசாயினி, துளசிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.03.2026 இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு கோண்டாவில் குமரகோட்ட இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
கோண்டாவில், குமர கோட்டம் (C-5100)
077 791 7748

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 07 - 1926 | மறைவு 22 - 03 - 2016



### அமரர்.திருமதி ஐயாத்துரை செல்வராணி

அன்பான அம்மம்மா!
இசையோடு இசைந்த அம்மம்மா
இசைக்கருவி இனிதாய் இயக்கும் அம்மம்மா
வசைமொழி அறியா அழகி அம்மம்மா
திசை காட்டித் திகில் நீக்கும் அம்மம்மா
அயலவரை அன்புடன் அணுகி
அவர் துயரில் ஆறுதல் அளித்து
இடக்கரம் அறியாமல்
வலது கரத்தால் வழங்கும் அம்மம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடைய
மனதார பிரார்த்திக்கும்
உங்கள் பேரப்பிள்ளைகள்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி

யாழ் மாவட்ட இசைக்குழுக்கலைஞர் சங்கம் நடாத்தும்
மாபெரும் இசைத்திருவிழா
Carnival Music Festival
CARNIVAL MUSIC FESTIVAL
வலம்புரி
Media Mathi
காங்கேசன் துறை உல்லாசக் கடற்கரை பிரதேச சபை மைதானம்
முதற் தடவையாக
யாழ் முன்னணி இசைக்குழுக்கள் ஒரே மேடையில்
சங்கமிக்கும் பிரம்மாண்ட தொடரிசை நிகழ்ச்சிகள்
Time 2 PM to 1 AM
MARCH 06: அருணா, சண், S.G.சாந்தன், நியூ ஆனந்
MARCH 07: யாழ் ராகம்ஸ், சிம்பொனி, சுருதிலயா, சண்சுருதி
MARCH 08: ப்ரண்ட்ஸ், யாழ் ரியூன்ஸ், எஸ். என் மியூசிக், சாரங்கா
ஒலி அமைப்பு: SMS SRI MURUGAN, MESIYA SOUND, MOHAN Sounds Jaffna
பிரவேசம் பெரியோர்:200/= சிறுவர்:100/=
DIAMOND SPONSOR FineMart Stylish
மேலதிக தகவல்களுக்கு 077 227 1142 077 205 1992 077 280 4865
DIAMOND SPONSOR விஜிதா VIJITHA Trade Mark No - 5532
SABARI
முத்துமாரி
வசந்தம் சுப்பமாக்கற் VASANTHAM FOOD (PVT) LTD No. 1, Kadduvan Mallakam Road, Masiyapiddi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் வீட்டுக்கடன் 50 இலட்சமாக அதிகரிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த வீட்டு வசதி மற்றும் சொத்துக் கடன்களுக்கான அதிகபட்ச எல்லை 50 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறை 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன் மொழிவுகளுக்கு அமைய நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவினால் வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதார சூழல் மற்றும் கட்டுமானச் செலவுகளைக் கருத்தில் கொண்டும் அரச ஊழியர்களின் நலன் கருதியும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# தீவிரமடையும் டெங்கு!

## இதுவரை 13,416 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை 13,416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகளவில் பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், டெங்கு நோயினால் இதுவரை 4 மரணங்களும் பதிவாகியுள்ளதாக அப்பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் வைத்தியர் பிரஷிலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாகத் தகுதிவாய்ந்த வைத்தியரை நாடிச் சிகிச்சை பெறுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)


# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 300 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 275 |
| தக்காளி | 100 | 90 | 100 | 150 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 150 | 100 |
| கோவா | 100 | 80 | 80 | 200 | 160 |
| கரட் | 300 | 180 | 330 | 350 | 300 |
| பூசணி | 120 | 120 | 120 | 150 | 80 |
| புடோல் | 100 | 200 | 200 | 200 | 130 |
| வாழைக்காய் | 150 | 180 | 180 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 180 | 300 | 300 | 300 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 200 | -- |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 | 300 |
| வெண்டக்காய் | 250 | 250 | 250 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 300 | 280 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 | 500 | 200 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 300 | 260 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 120 | 140 |
| கறிமிளகாய் | 400 | 400 | 350 | 400 | 350 |
| முருங்கைக்காய் | -- | 5000 | 5000 | 3000 | -- |
| போஞ்சி | 300 | 250 | 200 | 400 | 280 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 200 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 80-140 | 80-150 | 120 | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 200 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 170 | 100-160 | 120 |
| இராசவள்ளி | 300 | 550 | 500 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 200 | 80 | 80 | 200 | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 200 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 | 50 |
| வல்லாரை | 60 | 70 | 70 | 80 | 60 |
| ஈரப்பலா | 100 | 200 | 200 | 150 | 100 |

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 1947.10.18

காளியின் அடியில் 2026.02.27

விஸ்வகுல செம்மல், பசுமைப் புரட்சியாளர், சமூக ஜோதி

## செல்லையா கோபாலகிருஷ்ணன்

(கிருஷ்ணா இரும்புத் தொழிற்சாலை, கிருஷ்ணமஹால் கட்டட உரிமையாளர்)

காளி கோவிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் மாலியவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கோபாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த 2026.02.27 ஆம் திகதி அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-மகேஸ்வரி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் இளைய மருமகனும், மனோகரி (சின்னமணி) இன் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புச் சகோதரரும், சதீஸ்குமார், நந்தகுமார் (பொறியியலாளர்), தர்மகுமார் (DO, MOH Office, காரைநகர்), மஞ்சுளா, கிருஷ்ணகுமார், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி, கவிதா, ரேவதி (DO, பிரதேச சபை, சுழிபுரம்), வரதராஜா, பிரமிளா, வாகீசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், சுப்பிரமணியம், இரத்தினம், பாலசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அமுதினி, சஞ்சிதா, கவிநயன், நயனா, வேதஷ்வின், அபினகா, அபிலயன், தர்ணிகா, யனுரன், பிரணவிகா, ஹரேஷ், அஜேஷ், ஆரிஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, பாக்கியம் ஆகியோரின் பெறாமகனும், நாகராணி, ஆனந்தராணி, மகேந்திரன், ஸ்ரீவரதராஜா, நாகேந்திரராஜா, செந்தில்ராஜா, மதிபாலராஜா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2026.03.06 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P 076 679 6694

மாலியவத்தை,
சங்கானை.

(6962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமான சேவைகள் இரத்து

(கொழும்பு)

மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போர் மோதல்கள் காரணமாக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த அனைத்து விமான சேவைகளும் நேற்றைய தினமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

போர் மோதல்கள் ஆரம்பித்த கடந்த 28ஆம் திகதி முதல் இதுவரை, மத்திய கிழக்கிலிருந்து இலங்கைக்கு வரவிருந்த மற்றும் இங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த 115 விமான சேவைகள் முற்றாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கட்டுநாயக்க விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# பெறுகை அறிவித்தல்

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## சபைநிதி வேலைத்திட்டம் (Council)

## வீதி விளக்கு திருத்தம் -2026

01) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்ற போதும் வடமாகாணத்திற்கு உட்பட்ட கேள்விதாரர்களிடம் இருந்து மாத்திரமே கேள்விகள் பெறப்படும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி (தொலைபேசி 021-228-4400) இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்குறித்த முகவரியில் **03.03.2026** ஆம் திகதியிலிருந்து **16.03.2026** ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 14.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி என்னும் முகவரியில் **03.03.2026** ஆம் திகதியிலிருந்து **16.03.2026** ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 14.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு **17.03.2026** ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே **(17.03.2026 மு.ப 10.00)** வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) தேவையான தகைமைகள் மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது.

08) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

09) கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **05.05.2026** வரை செல்லுபடியாகும்.

10) கேள்விகள் தொடர்பான இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.

11) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு பணமாக எமக்கு செலுத்தி பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | தொடர் இல | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/Council/KPS/Streetlamp/2026/NCB/01 | 01 | 50W LED Street Light | 230 Nos | 60,000.00 | 02.06.2026 |
| | 02 | 100W LED Street Light | 150 Nos | | |
| | 03 | Chip | 850 Nos | | |
| | 04 | Drive | 850 Nos | | |
| | 05 | Sensor | 900 Nos | | |
| | 06 | PC | 500 Nos | | |
| | 07 | Keating Paste | 50 Nos | | |
| | 08 | Insulation Tape | 300 Nos | | |

- கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 13. 03. 2026 ஆம் திகதி மு.ப 11 .00 மணிக்கு, கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-5099) **03.03.2026**

# மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம் தகவல் அறிய தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

மோதல் காரணமாக மத்திய கிழக்கில் பெரும்பாலான விமான நிலையங்கள் மூடப்பட்டிருப்பதால், பிராந்தியத்திலிருந்து இலங்கையர்களை உடனடியாக வெளியேற்றுவது தற்போது சாத்தியமில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது சுமார் 1 மில்லியன் இலங்கை வெளிநாட்டு ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

பிராந்தியத்தில் உள்ள இலங்கையின் இராஜதந்திர பணிகள் முன்னேற்றங்களை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன், தேவையான உதவிகளை வழங்குவதாகவும் அவர் கூறினார்.

மேலும், தூதரக உதவி மற்றும் தொடர்புடைய விசாரணைகளுக்கு அரசாங்கம் பின்வரும் தொடர்பு எண்களை வழங்கியுள்ளது:

❖ **வெளிவிவகார அமைச்சு: 0094 742595546**

❖ **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்: 0094 719802822**

❖ **துரித எண்கள்: 1989.**

(நி)

# QR குறியீடு அவசியமில்லை

(கொழும்பு)


எரிபொருள் விநியோகத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லாத காரணத்தினால் எரிபொருள் விநியோகத்துக்கான QR குறியீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இதற்கு முன்பு நாடு எதிர்கொண்ட எரிபொருள் நெருக்கடி நிலைமையின் போது மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோக முறை கடைபிடிக்கப்பட்டதால் எரிபொருள் விநியோகத்துக்காக QR குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது எரிபொருள் விநியோகத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டில் போதுமான அளவுக்கு எரிபொருள் இருக்கிறது.

தேவை ஏற்பட்டால், QR குறியீடு முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் பரிசீலிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (நி)



புலோலி கிழக்கு சந்தா தோட்டம் ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய இரதோற்சவம் கடந்த 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அடியார்கள் புடைசூழ பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை, ஜாதகம், கைரேகை, எண்கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

(C-5098)

074 196 4945

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஈரானுக்கு ஆதரவாக களமிறங்கும் ஹிஸ்புல்லா



(டெஹ்ரான்)

லெபனானில் இருந்து இஸ்ரேல் நோக்கி ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவியதாக ஹிஸ்புல்லா உறுதிப்படுத்தியுள்ளது.

ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனி கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இது இருப்பதாக அந்தக் குழு கூறுகிறது.

இஸ்ரேலிய இராணுவத்தின் கூற்றுப்படி, ஏவுகணைகள் இஸ்ரேலிய பிரதேசத்தில் திறந்த பகுதிகளில் விழுந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இஸ்லாமிய அரசியல் மற்றும் இராணுவக் குழுவான ஹிஸ்புல்லா, ஈரானின் வலுவான ஆதரவைக் கொண்டுள்ளது. இந்நிலையில் இஸ்ரேல் மீது எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதிலளிக்கும் விதமாக, லெபனான் முழுவதும் ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான இலக்குகளைத் தாக்கத் தொடங்கியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒரு அறிக்கையில், இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் ஹிஸ்புல்லா ஈரானின் சார்பாகச் செயற்பட்டு பொது மக்களை குறிவைப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளன.

ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகள் லெபனானுக்கு மேலும் அழிவைக் கொண்டுவரும் அபாயம் இருப்பதாகவும், தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு வலுவாகப் பதிலடி கொடுப்பதாகவும் ஐ.டி.எஃப் கூறியுள்ளது. (3)

## பதிலடிக்குத் த

## வளைகுடா

(டெஹ்ரான்) -----------------------------

**ஈரானின் தாக்குதல்களில் இருந்து தங்கள பாதுகாத்துக் கொள்ளவும் தேவைப்பட்டால் அத பொருத்தமான முறையில் பதிலடி கொடுக்கவும் தயா இருப்பதாக வளைகுடா நாடுகள் கூட்டாக அறி துள்ளன.**

ஈரானின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய வளைகுடா ஒத்துழைப்பு சபை இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


அதன்படி, பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிப்பதற்காகப் பல கட்ட தூதரக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவற்றையெல்லாம் மீறி ஈரான் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வ

இது குறித்து இந் வெளியிட்டுள்ள கூட்டறிக் எங்களது நாடுகளின் ப மற்றும் ஸ்திரத்தன்மை எ எவ்வித சமரசத்திற்கும் இட

ஈரானின் இந்த அத் ளுக்கு முற்றுப்புள்ளி வை நாங்கள் அனைவரும்

## ஈரான் மீதான போர் 4 வாரங்கள் நீடிக்கலாம்

### ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் நான்கு வாரங்கள் வரை நீடிக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரித்தானியாவின் "டெய்லி மெயில்" இதழிற்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை நான்கு வாரங்கள் அல்லது அதற்கும் குறைவான காலத்திலேயே நிறை வடையக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஈரான் ஒரு பெரிய நாடு என்பதால், அதன் வலிமைக்கு ஏற்ப இந்த கால அவகாசத்தை தாம் கணக்கிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கதவுகள் இன்னும் திறந்தே இருப்பதாகவும் தெரிவித்த ட்ரம்ப் இந்தப் பேச்சு வார்த்தைகள் விரைவில் நடைபெறுமா என்பது குறித்து தெளிவான பதிலை அளிக்கவில்லை என கூறப்படுகின்றது.


ஈரானிய தரப்பினர் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும், ஆனால் அவர்கள் கடந்த வாரமே பேசியிருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் அதன் அனைத்து இலக்குகளையும் எட்டும் வரை முழு வீச்சில் தொடரும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இது குறித்து "ட்ரூத் சோஷியல்" தளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொளி செய்தியில், ஈரானுடனான இந்த மோதலில் இதுவரை மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளார். (3)

## வன்முறையின் சுழற்சி

## பாப்பரசர் அ



(வத்திக்கான்)

வத்திக்கானில் உள்ள கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் பாப்பரசர் லியோ,

வன்மு உடன கோரிக் செய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த் தயாராகும் ...ா நாடுகள்!

--------

...தங்களைப் ...ல் அதற்குப் ...வும் தயாராக ...க அறிவித்



...களை நடத்தி வருகிறது.
...குறித்து இந் நாடுகள் ...டுள்ள கூட்டறிக்கையில், ... நாடுகளின் பாதுகாப்பு ...ஸ்திரத்தன்மை விடயத்தில் ...மரசத்திற்கும் இடமில்லை. ...ின் இந்த அத்துமீறல்க ...ற்றுப்புள்ளி வைப்பதற்காக ... அனைவரும் ஒன்றி ணைந்து செயற்பட உள்ளோம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் போர்ப்பதற்றங்களுக்கு மத்தியில், வளைகுடா நாடுகளின் இந்தத் திடீர் அறிவிப்பானது மோதல் களைத் தீவிரமாக்கலாமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (3)

### கமேனி உயிரிழப்பு

# ஈரான் நட்பு நாடுகள் கடும் கண்டனம்!

(டெஹ்ரான்)

அமெரிக்கா-இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலில் ஈரானிய உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதற்கு ஈரானின் நட்பு நாடுகளான ரஷ்யா, சீனா, வடகொரியா, ஏமன் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இது குறித்து ரஷ்யா வெளியிட்ட அறிக்கையில் "ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் உயர்மட்டத் தலைவர் சையத் அலி கமேனி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், மனித அறநெறி மற்றும் சர்வதேச சட்டத்தின் அனைத்து விதிகளையும் அப்பட்டமாக மீறும் வகையில் படுகொலை செய்யப்பட்டதற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என புடின் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் தலைவரை வெளிப்படையாகக் கொல்வதும் , ஆட்சி மாற்றத்தைத் தூண்டுவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங்க்ஈ தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவும் அதன் கூட்டாளியும் "சுயநல மற்றும் மேலாதிக்க அபிலாசைகளை" நிறைவேற்றுவதற்காக இராணுவ பலத்தை துஷ்பிரயோகம் செய்வதாகவும், வெட்க மற்ற மற்றும் குண்டர் கும்பல் போன்ற நடத்தையில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தக் கொடூரமான குற்றம் அனைத்து சர்வதேச சட்டங்கள் மற்றும் விதி முறைகளின் அப்பட்டமான மீறலைக் குறிக்கிறது என்று ஏமனில் உள்ள ஹூத்திகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் இறையாண்மைக்கு எதிரான இந்த அப்பட்டமான ஆக்கிரமிப்பு மற்றும் கொடூரமான குற்றத்திற்கும், பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு, அதன் கடுமையான விளைவுகளுக்கும் அமெரிக்காவும் இஸ்ரேலும் முழுப் பொறுப்பேற்க வேண்டும் என ஹமாஸ் தெரிவித்துள்ளது. (3)

### ...ா சுழற்சியை உடனடியாக நிறுத்துமாறு

# ...சர் அவசர கோரிக்கை



...கத் ...ின் ...யா, வன்முறையின் சுழற்சியை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் உள்ள யாத்ரீகர்களுக்கு வாராந்திர உரையை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

"வன்முறையின் சுழல், சரிசெய்ய முடியாத படுகுழியாக மாறுவதற்கு முன்பு அதைத் தடுக்கும் தார்மீகப் பொறுப்பை சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்க வேண்டும் என்று நான் மனதார வேண்டுகோள் விடுக்கிறேன்" என்று அவர் கூறினார்.

"ஸ்திரத்தன்மையும் அமைதியும் பரஸ்பர அச்சுறுத்தல்கள் மூலமாகவோ அல்லது ஆயுதங்கள் மூலமாகவோ கட்டமைக்கப்படுவதில்லை. மாறாக நியாயமான, உண்மையான மற்றும் பொறுப்பான உரையாடல் மூலம் மட்டுமே கட்டமைக்கப்படுகின்றன." எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

# ஐ.நா சபையிடம் அவசர கூட்டத்திற்கு கோரிக்கை விடுத்தார் மக்ரோன்

(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன்; இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஈரானில் நடத்திய தாக்குதல்களுக்கு பிந்தைய பதற்ற உயர்வு அனைவருக்கும் ஆபத்தானது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என எச்சரித்த அவர், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தைக் கோரியுள்ளார்.



மேலும், தேசிய பாதுகாப்பிற்கும் மத்திய கிழக்கில் உள்ள குடிமக்கள் மற்றும் கூட்டாளிகளை பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். அத்துடன், ஈரான் தனது அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களை முடிவுக்கு கொண்டு வர நல்ல நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும், பிராந்திய நிலை தடுமாற்றத்தை ஏற்படுத்தும் செயல்களை நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு கூட்டாளிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதாகவும் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தைக் கட்டியெழுப்பும் சிற்பிகள்: உலகப் பொறியியல் தினச் சிறப்புப் பார்வை

**1. அறிமுகம்**

ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்வது அதன் உட்கட்டமைப்பும் தொழில்நுட்ப வளர்ச்சியுமாகும். அந்த வளர்ச்சியைத் தீர்மானிக்கும் சக்திகளாகப் பொறியியல்துறை சார்ந்தவர்கள் விளங்குகிறார்கள். இலங்கையைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளில், வளங்களைச் சரியாகக் கையாண்டு நிலையான அபிவிருத்தியை நோக்கி நாட்டை நகர்த்துவதில் பொறியியல் துறையின் பங்கு அளப்பரியது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4ஆம் திகதி அனுசரிக்கப்படும் **"உலகப் பொறியியல் தினம்"**, இந்த மேதைகளின் உழைப்பைக் கௌரவிக்கும் ஒரு முக்கியத் தருணமாகும்.

**2. பொறியியல் துறையின் முக்கியத்துவம்**

பொறியியல் என்பது வெறும் கணிதமும் அறிவியலும் மட்டுமல்ல அது சிக்கல்களுக்குத் தீர்வு காணும் ஒரு கலை. கட்டுமானம், மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு என ஒரு தேசத்தின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பொறியியல் துறையையே நம்பியுள்ளன. ஒரு நாடு பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமாயின், அங்கே நவீனப் பொறியியல் நுட்பங்கள் புகுத்தப்படுவது அத்தியாவசியமானது.

**3. அன்றாட வாழ்வில் பொறியியலின் வகிபாகம்**

காலையில் நாம் அலாரம் வைத்து எழுவது முதல், இரவு மின்விசிறியின் கீழ் உறங்குவது வரை நமது ஒவ்வொரு அசைவிலும் பொறியியல் இரண்டறக் கலந்துள்ளது.

•கட்டுமானம்: நாம் வாழ்வது முதல் அனைத்து சேவைகளுக்கான இடமாக காணப்படும் கட்டுமானங்கள்

•தகவல் தொடர்பு: ஸ்மார்ட் போன்கள் மற்றும் இணையம்.

•போக்குவரத்து: மோட்டார் வாகனங்கள் முதல் அதிவேக ரயில்கள் வரை.


•மருத்துவம்: MRI ஸ்கான் முதல் உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் வரை. இவை அனைத்தும் பொறியியலின் கொடைகளே. நாம் சுவாசிக்கும் காற்றைத் தூய்மைப்படுத்துவது முதல் குடிநீரை விநியோகிப்பது வரை இத்துறை நீக்கமற நிறைந்துள்ளது.

**4. பொறியியல் துறை சார்ந்தவர்களின் சமூகத்திற்கான பங்களிப்பு**

பொறியியல்துறை சார்ந்தவர்கள் சமூகத்தின் "பிரச்சினை தீர்ப்பாளர்கள்" (Problem Solvers) என அழைக்கப்படுகிறார்கள்.

•பேரிடர் மேலாண்மை: வெள்ளம் அல்லது நிலநடுக்கம் போன்ற காலங்களில் பாதுகாப்பான கட்டடங்களை வடிவமைத்தல்.

•நிலைபேறான வளர்ச்சி: சுற்றுச் சூழலைப் பாதிக்காத வகையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (சூரிய சக்தி, காற்றாலை) மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.




•உட்கட்டமைப்பு: பாலங்கள், அணைகள் மற்றும் நெடுஞ்சாலைகளை அமைப்பதன் மூலம் கிராமப்புறங்களையும் நகரங்களையும் இணைத்தல்.

**5. உலகப் பொறியியல் தினத்தின் உருவாக்கமும் நோக்கமும்**

யுனெஸ்கோ (UNESCO) அமைப்பினால் 2019ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட இந்தத் தினம், 2020 முதல் உலகளவில் கொண்டாடப்படுகிறது.

• நோக்கம்: ஐக்கிய நாடுகளின் "நிலையான வளர்ச்சி இலக்குகளை" (Sustainable Development Goals) அடைவதில் பொறியியல்துறை சார்ந்தவர்களின் பங்களிப்பை உலகிற்கு எடுத்துரைப்பது மற்றும் இளம் தலைமுறையினரை இத்துறையில் ஈர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

**6. உலகப் பொறியியல் தினத்தின் இன்றியமையாமை**

இன்றைய உலகம் காலநிலை மாற்றம், தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் சனத்தொகை பெருக்கம் போன்ற பாரிய சவால்களை எதிர்கொள்கிறது. இவற்றுக்குத் தீர்வுகாண வெறும் அரசியல் முடிவுகள் மட்டும் போதாது. நுட்பமான பொறியியல் தீர்வுகள் அவசியம். உலகப் பொறியியல் தினம் என்பது அந்தத் தீர்வுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்குமான ஒரு தளமாக அமைகிறது.

**7. உலகப் பொறியியல் தினத்தின் கருப்பொருள் (Theme)**

ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் கீழ் இத்தினம் கொண்டாடப்படுகிறது. தற்போதைய காலப் பகுதியின் பிரதான கருப்பொருள் "நிலையான எதிர்காலத்திற்கான பொறியியல் கண்டுபிடிப்புகள்" (Engineering Innovation for a More Resilient World) என்பதாகும். இது வெறும் வளர்ச்சியாக இல்லாமல், எதிர்காலத் தலை முறைக்குத் தீங்கு விளைவிக்காத வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**8. பொறியியல் துறையினர் கொண்டாடப்பட வேண்டியவர்களா?**

நிச்சயமாக! ஒரு மருத்துவர் ஒரு உயிரைக் காப்பாற்றுகிறார் என்றால், ஒரு பொறியியல்துறை சார்ந்தவர்கள் ஆயிரக்கணக்கான உயிர்கள் ஆபத்தில் சிக்காமல் இருக்க பாதுகாப்பான பாலங்களையும், குடிநீர் கட்டமைப்புகளையும், மின்சார வசதிகளையும் உருவாக்குகிறார். திரைக்குப் பின்னால் இருந்து இயங்கும் இந்த "நிசப்த நாயகர்கள்" தகுந்த அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் பெற வேண்டியவர்கள்.

**9. பொறியியல் துறை சார்ந்தவர்களுக்கான பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்**

இலங்கையின் நிலப்பரப்பில் பிரம்மாண்டமான நீர்ப்பாசனக் கட்டமைப்புகள், வீதிகள் மற்றும் பாலங்கள், கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்களை உருவாக்கிய முன்னோடிப் பொறியியல்துறை சார்ந்தவர்கள் முதல், இன்று மென்பொருள் துறையில் (Software Engineering) உலகத்தையே இலங்கையை நோக்கித் திரும்பிப் பார்க்க வைக்கும் இளைஞர்கள் வரை அனைவரும் பாராட்டத்தக்கவர்கள். உங்கள் அயராத உழைப்பும், புதியன படைக்கும் சிந்தனையும் இந்தத் தேசத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அஸ்திவாரம். உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

**10. முடிவுரை**

பொறியியல் என்பது வெறும் தொழில் அல்ல அது மனித நாகரிகத்தின் வளர்ச்சிப் பாதை. இலங்கையின் அபிவிருத்திப் பயணத்தில் பொறியியல்துறை சார்ந்தவர்களின் கரங்கள் எப்போதும் வலிமையானவை. இந்த உலகப் பொறியியல் தினத்தில், சவால்களைச் சாதனைகளாக மாற்றும் நமது நாட்டுப் பொறியியல்துறை சார்ந்தவர்களைப் போற்றுவோம். தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி வறுமையற்ற, பசுமையான இலங்கையைக் கட்டியெழுப்ப உறுதிபூணுவோம்.

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

## இராசிபலன்

03.03.2026
மாசி 19 செவ்வாய்க்கிழமை
பூரணை பிற்பகல் 5.49 மணிவரை
மகம் முற்பகல் 8.05 மணிவரை

சுப நேரம் 10.57-12.27 மணிவரை
இராகு காலம் 3.27-4.57மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்
திருவோணம்.

**வளவன்**

**மேஷம்:** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுப முயற்சியின் மூலம் சுகம் கூடும் நாள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லத் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**ரிஷபம்:** பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொலைபேசிவழியில் ஆர்வம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, இனிய சம்பங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடிவரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசனசுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, விரதங்களில் நம்பிக்கை கூடும், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியை கொடுக்கும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

வெற்றியின் சிறந்த பயன் மன்னித்தலே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 V

# யாழ்.போதனா வைத்தியசாலை

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகின்ற வெளிநோயாளர்கள் மற்றும் கிளினிக் சிகிச்சையாளர்களைத் தவிர, வைத்தியசாலை விடுதிகளில் தங்குகின்ற நோய்நிலையுடன் வருகின்றவர்கள் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் மிகவும் விழிப்பாகவும் நிதானமாகவும் இருக்க வேண்டும்.

ஏனெனில் இங்கு தான் நோயாளர்களின் 'விதி' தீர்மானிக்கப்படுகிறது.

ஆம், வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளி மயக்கமுற்ற நிலையில் அல்லது ஸ்ரெச்சரில் வருகின்றபோது அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுகின்றார்.

அதன் காரணமாக அவர் மருத்துவர்களின் உடனடிக் கண்காணிப்புக்கு ஆளாகுவதுடன் அவசரமாக சிகிச்சையும் வழங்கப்படுகின்றது.

இங்குதான் சம்பந்தப்பட்ட நோயாளி உயிர் பிழைப்பதற்கான -சுகமடைவதற்கான விதிக்கு ஆளாகின்றார்.

அதேநேரம் நோயாளி நடந்து சென்றால் அல்லது சற்று உசாராக இருந்து விட்டால், அவ்வளவு தான். அவரை விடுதியில் அனுமதிக்கின்ற முடிவு; அனுமதிப் பிரிவில் இருக்கக்கூடிய மருத்துவர்களால் எடுக்கப்படுகிறது.

இங்கு ஒரு பெருங் குறைபாடு இருந்தது என்பதை அனுபவத்தில் கண்டறிந்த யாம் கூறுவது பொருத்துடையதே.

உண்மை. சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் என் உறவினரான நோயாளி ஒருவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றேன். அனுமதிப் பிரிவில் இருந்த மருத்துவர் எழுந்து நோயாளிக்குக் கிட்டவும் வரவில்லை. பதினைந்து அடி தூரத்தில் இருந்து கொண்டு வெறுப்போடு நோயாளியிடம் கேள்வி கேட்டார்.

பிரஸ்தாப நோயாளி ஒரு தகைமை பெற்ற பொறியியலாளர். தவிர, அவரது குடும்பத்தினர் தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லலாம் எனக் கூறியிருந்தனர்.

நான் அதை மறுத்தேன். என்னதான் இருந்தாலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தான் ஒரே இடம். அங்கு செல்வது தான் பொருத்தம் எனக் கூறினேன். என் கஷ்ட காலமோ அல்லது நோயாளியின் விதியோ தெரியவில்லை அதனை குடும்பத்தினர் ஏற்றுக் கொண்டனர்.

அந்த நம்பிக்கையோடு சென்றபோது தான் அனுமதிப் பிரிவில் கடமையில் இருந்த மருத்துவர் ஏலவே கூறியது போல நடந்து கொண்டார்.

இதற்கு முன்னதாக, நோயாளியை அமர வைத்துக் கொண்டு செல்வதற்கான வீல் செயாரை தேடிப் பெற்றுக் கொள்வதிலேயே பெரும் இடர்பாடாயிற்று.

இது மற்றவர்களுக்குப் பெரிய விடயமாகத் தெரியா விட்டாலும் அவஸ்தைப் படுகின்ற நோயாளியோடு உடனிருந்த எனக்கு பதற்றமாகவும் ஏக்கமாகவும் இருந்தது.

அங்கு கடமையாற்றும் ஓர் இளம் ஆண் பரிசாரகரிடம் வீல் செயார் எங்கே எடுக்கலாம் எனக் கேட்டேன்.

அந்த இளம் பரிசாரகர் தன்னை அரச பணியாளராகவோ அன்றி தான் ஒரு வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற அரச ஊழியராகவோ இம்மியும் நினைக்காமல், அதற்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்ற பாங்கில் பதிலளித்தார்.

அவரின் பதில் எனக்கு திகைப்பாக இருந்தது. பரவாயில்லை. ஒரு வீல் செயாரைத் தேடி எடுத்து அதில் நோயாளியை இருத்தி உருட்டினேன். அன்று எனக்கு சந்திராஷ்டமம் போலும்.

வீல் செயாரின் சில்லுகள் காற்றை இழந்திருந்தன.

காற்றில்லாத வண்டியை, ஏற்ற இறக்கம் கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை சிமெந்துத் தரையில் நீண்ட தூரம் உருட்டுவதன் கடினம் எத்தகையது என்பது அனுபவப்பட்டவர்களுக்கு நன்கு தெரியும்.

என்ன செய்வது காலம் வகுத்த விதி போல ஒரு பொது மருத்துவ நோயாளி 24 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

24 ஆம் விடுதி என்பதாலோ என்னவோ அங்கு 24 மணித்தியாலங்கள் தங்கி இருக்க வேண்டியதாயிற்று.

24 மணிநேரம் முடிய 24 ஆம் விடுதியில் இருந்து பொது மருத்துவம் சார்ந்த இரண்டு விடுதிகளுக்கு குறித்த நோயாளி ஓரிரு மணித்தியால இடைவெளியில் மாற்றப்பட்டார்.

அவ்வாறு மாற்றப்பட்டு சில நிமிடங்களில் 60 வயதான அந்த பொறியியலாளரின் உயிர் பிரிந்தது.

சிலவேளை; நோயாளர்களை விடுதியில் அனுமதிக்கின்ற பிரிவில் கடமையாற்றிய மருத்துவர் ஒரு நிமிடம் எழுந்து வந்து, அந்த நோயாளியை பார்த்திருந்தால்-அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்திருந்தால் மருத்துவர்களின் நேரடிக் கண்காணிப்புக் கிடைத்திருக்குமோ என்று எம் ஏழை மனம் இன்றுவரை எண்ணுகிறது.

குறித்த நோயாளியை 24 ஆம் விடுதியில் அனுமதித்ததில் ஏற்பட்ட தவறு தான் வைத்தியசாலைக்கு சென்றும் மருத்துவ சிகிச்சை எதுவும் கிடைக்காமல் உயிரிழந்து போகின்ற பரிபாத நிலை ஏற்பட்டது என்பது சர்வநிச்சயமான உண்மை.

அதேநேரம் 24 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவரை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க முடியாதா? என வைத்தியசாலை நிர்வாகத்திடம் வினவிய போது, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 8 கட்டில்கள் மட்டுமே உள்ளன. அது முழுமை பெற்று விட்டது. ஆகையால் எதுவும் செய்ய முடியாது எனப் பதில் கிடைத்தது.

இங்குதான் விடுதியில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளர்களில்; அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் யாவர் என்ற தீர்மானத்தை எடுப்பது தொடர்பில் ஒரு சரியான பொறிமுறை தேவையென்ற கருத்தை இங்கு முன்வைக்கின்றோம்.

நாளை தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்(வாக்கிய பஞ்சாங்கம்)
# (06.03.2026-24.04.2028)

## திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி என்றால் என்ன எப்போது வருகிறது?



சனிப்பெயர்ச்சி எப்போது நடக்கிறது யாருக்கு எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை பற்றியே ஆர்வம், எதிர்பார்ப்பு மற்றும் லோசன பயமும் இருக்கும். இதில் திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் வாக்கிய பஞ்சாங்கம் என்று இரண்டு வகையான பஞ்சாங்கத்தில் சனிப்பெயர்ச்சி திகதிகள் மாறுபடுகிறது. அதேபோல சனிப் பெயர்ச்சியில் பல வகைகள் உள்என. ஏழரைச் சனி, அஷ்டம சனி, மட்டுமல்லாமல் பொங்கு சனி, மங்கு சனி என்று சனிப்பெயர்ச்சிக்கு பல பெயர்களும் இருக்கின்றன. இதில் திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி என்று சமீபமாக பரவலாக பேசப்பட்டு வருகிறது. திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி என்றால் என்ன இந்த சனிப் பெயர்ச்சி எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பார்க்கலாம்.

### திருநள்ளாறு சனி பெயர்ச்சி என்றால் என்ன?

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி என்பது வாக்கிய பஞ்சாங்கத்தின் படி நடக்கும் சனிப்பெயர்ச்சியை தான் குறிக்கிறது. வாக்கிய பஞ்சாங்கம் என்பது பெரும்பாலான கோவில்களில் பின்பற்றப்படும் பஞ்சாங்கத்தின் முறைப்படி, கோள்களின் இயக்கத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்படும். வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மார்ச் மாதம் ஆறாம் திகதி வெள்ளிக்கிழமை அன்று சனி பெயர்ச்சி நடக்கிறது.

சனி பகவானுக்குரிய பரிகார ஸ்தலமாக திருநள்ளாறு கோவில் தான் முதன்மையாக விளங்குகிறது. வாக்கிய பஞ்சாங்கத்தை பின்பற்றும் கோவில்களில் திருநள்ளாறு சனிப் பெயர்ச்சி கோவிலும் வருவதால் வாக்கிய பஞ்சாங்கத்தின் படி நடக்கும் சனிப்பெயர்ச்சி திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி என்று அழைக்கப்படுகிறது.

### திருக்கணித சனி பெயர்ச்சி திகதி

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி இந்த சனிப்பெயர்ச்சி 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதமே நடந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கடந்த ஆண்டு திருநள்ளாறில் சனிப்பெயர்ச்சி விழா அல்லது பரிகார பூஜைகள் சாந்தி பூஜைகள் எதுவும் நடைபெற வில்லை. இதனால் தான் மக்கள் மத்தியில் திருநள்ளாறு சனி பெயர்ச்சி என்பது திருநள்ளாறில் எப்போது விசேடமான பூஜைகள் செய்யப்படுகிறதோ அப்பொழுது தான் சனிப்பெயர்ச்சி என்று பதிந்துள்ளது.

### திருநள்ளாறு சனி பெயர்ச்சி 2026

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி அல்லது வாக்கிய சனி பெயர்ச்சி 2026 மார்ச் மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. 2026 தொடங்கும் சனிப் பெயர்ச்சி 2028 வரை நீடிக்கும்.

தனது ஆட்சி வீடுகளில் ஒன்றான கும்ப இராசியில் உச் சரித்து வரும் சனி பகவான், குருவின் ஆட்சி வீடுகளில் ஒன்றான மீன இராசிக்கு செல்கிறார்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி கும்ப இராசி, மீன இராசி, மற்றும் மேஷ இராசி ஆகிய மூன்று இராசிகளுக்கு ஏழரை சனியாக இருக்கும். சிம்ம இராசிக்கு அஷ்டம சனியாக இந்த சனிப்பெயர்ச்சி இருக்கும்.




### ஆற்றலும், செயல் திறனும் கொண்டு விளங்கும் மேஷ இராசி வாசகர்களே!

உங்களின் இராசிக்கு பத்து பதினொன்றுக்குரிய சனி பகவான் வரும் 06-03-2026 முதல் ஏழரை சனியின் முதல் சுற்றாக... விரைய சனியாக... அமர்கிறார். உங்களின் இராசியில் நீச்சம் பெறும் சனி பகவான் விரையத்தில் அமர்வது நல்லது என்றாலும் உங்களின் முன்னேற்றம் தொடர்ந்து வளம் பெற வழிபாடுகளால் சரி செய்து கொள்வீர்கள்.

இந்த ஆண்டு தொடங்கும் சனிப் பெயர்ச்சி இரண்டரை ஆண்டு காலம் விரைய சனியாக அமர்ந்து தன ஸ்தானத்தையும், சத்ரு ஸ்தானத்தையும், பாக்கிய ஸ்தானத்தையும் பார்வையிடுவது உங்களின் சகல காரியமும் தடை பட்டு புதிய தொழில் முடிவுகளை தடைபடுத்தும் நிலையையும் உண்டு பண்ணுவார். சனி கொடுத்தால் யார் தடுப்பார் என்பது போல சனி பிடித்தால் யார் சரி செய்வார் என்பதில் உங் களின் முழுமையான கவனம் இருக்கும். தொழிலை தக்க வைப்பதும். புதிய தொழில் முயற்சியை கைவிடுவதும் நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கவன குறைவு காரணமாக தண்டனை பெற வேண்டி வரும் என்பதால் பணியில் கவனமுடன் இருப்பது நல்லது. செய்யும் தொழிலில் ஆசை வார்த்தைகளை நம்பி முதலீடுகளை செய்வதை தவிர்த்து, இருக்கும் தொழிலை தக்க வைக்க என்ன வழியோ அதை செய்வது தான் நல்லது. பாது காப்பு பணியில் இருப்பவருக்கு எதிர்பாராத சூழ்நிலைகளால் கஷ்டம் உண்டாகும்.

கடன் பெறுவதை தவிர்த்து, தன் செல்வாக்குகளை மறந்து, யாரிடமும் அதிகமாக பேசுவதை தவிர்த்தால் நல்லது நடக்கும். எந்த காரியமாக இருந்தாலும் நம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே இந்த கொள்கையைக் கடைப்பிடித்தால் பிற்காலத்தில் நன்மை உண்டாகும்.

உறவினர்களின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் அமைதியாக சகித்துக் கொண்டால் பிரச்சினையின்றி இருக்கலாம். பண விடயத்தில் யாருக்கும் பிணையம் இடுவதையும், வாங்கி தருவதையும் தவிர்ப்பது நல்லது.

#### பரிகாரங்கள்:

சனிக்கிழமைகளில் தவறாமல் பைரவருக்கு மூன்று நல்லெண்ணெய் தீபமிட்டு சிவப்பு அரளி பூமாலை சாற்றி வேண்டிக் கொள்ள நன்மை உண்டாகும்.




### நிறைவான வாழ்க்கை வேண்டுமென்று நினைக்கும் ரிஷப இராசி வாசகர்களே!

உங்களின் இராசிக்கு பாக்கியாதிபதியும், தொழில் ஸ்தானாதிபதியாகி சனி பகவான் உங்களின் இலாபஸ்தானத்தில் அமர்ந்து இராசியையும், பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும் அட்டம ஸ்தானத்தையும் பார்வை இடுவது உங்களின் வளமான வாழ்வுக்கு நற்பலனைப் பெற்றுத் தருவார்.

உங்களின் இராசிக்கு யோகாதிபதியான சனி பகவான் இராசியை பார்வை இடுவது மிக சிறப்பு. மேலும் இலாபஸ்தானத்தில் அமர்வது மிகமிக சிறப்பு. சனி பதினொன்றில் அமர்ந்து கொடுக்கும் பலனை யாராலும் தடுக்க முடியாது. கொண்ட கொள்கையில் வெற்றியும், எடுத்த காரியத்தில் வளர்ச்சியையும். கொடுத்த வாக்குறுதிகளை செய்து முடிக்கும் நல்ல வாழ்க்கை சூழ்நிலையும் அமையும். சொத்து சார்ந்த வழக்குகளில் சாதகமான சூழ்நிலை உண்டாகும். பொது காரியங்கள் உங்களின் எண்ணம் போல் அமையும். கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வீர்கள்.

இரண்டரை ஆண்டு கால நற்பலன்களை பல்வேறு வழிகளில் அனுபவிப்பீர்கள். பிறந்த ஜாதகத்தில் சனி ஆட்சி உச்சம் பெற்று இருப்பவருக்கு எதிர் பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். எதை செய்தாலும் அதில் பல வழிகளால் பலன் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகளும், பாராட்டும், பரிசுகளும் கிடைக்கப் பெறுவீர்கள். பிரிந்த உறவுகள் வந்து இணைவார்கள்.

சுபகாரியம் கைகூடும். சிலருக்கு சொந்த வீடு கட்டும் பாக்கியம் கிட்டும். சுயதொழிலில் மேன்மையும், புனித யாத்திரை சென்றுவர வாய்ப்பும் அமையும். குறுகிய கால தொழில் வாய்ப்புகளில் வளர்ச்சியைக் காண்பீர்கள். அரசியலிலும், பொது நல செயலிலும் உங்களின் செல்வாக்கு உயரும். தேர்தலில் வெற்றி வாகை சூடுவீர்கள். பண வரவுகள் சீராக இருக்கும்.

சரியான பாதையை தெரிவு செய்து மேன்மை அடைவீர்கள். மாணவர்களின் கல்வித் திறன் அதிகரிக்கும். சிலருக்கு பணி செய்து கொண்டு கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுவீர்கள். ஆன்மீகவாதிகளுக்கு தங்களின் சூழ் நிலைகளை மாற்றிக் கொண்டு வளம் பெற தேவையான வசதிகளைப் பெறுவீர்கள்.

#### பரிகாரங்கள்:

ஞாயிறு இராகு காலத்தில் நவக்கிரக வழிபாடு பைரவருக்கு நல்லெண்ணெய் தீபமிட்டு தயிர் அன்னம் வைத்து வேண்டிக் கொள்ள சகல காரியமும், வெற்றியும், பொருளாதார வளமும் பெறுவீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் இடம்பெறும் மோதலை ஒரு போதும் அங்கீகரிக்கவில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் மோதல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளதுடன் போரை ஒரு போதும் அங்கீகரிக்கப் போவதில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுத் திங்கட்கிழமை (02) நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் உடனடியாகப் பகைமையைக் கைவிட்டு, உலகளாவிய அமைதியை உறுதிப்படுத்த முன்வர வேண்டும் என இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது என்றார்.

மேலும் மத்திய கிழக்கு பிராந்தியம் இலங்கையின் பொருளாதாரத்துடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ள ஒரு மிக முக்கியமான பிராந்தியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

சுமார் 10 லட்சம் (1 million) இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றனர். அங்குள்ள இலங்கைத் தூதரகங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன்,

தேவையான உதவிகளையும் வழங்கி வருகின்றன என்று தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வான்பரப்புகள் மற்றும் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் இலங்கையர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேற்றுவது தற்போது சாத்தியமில்லை என அவர் குறிப்பிட்டார். (ம-7)

# சிவனொளிபாதமலையில் போதையுடன் 6 பேர் கைது

(கொழும்பு)

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை வந்த ஆறு இளைஞர்கள் பல்வேறு போதைப் பொருட்களுடன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை (01) அன்று நல்லதண்ணி நகரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 25 முதல் 33 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் மொறட்டுவை மாத்தறை, பாயாகலை, வங்கதெனிய, ஹக்மனை மற்றும் மீகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கஞ்சா, ஐஸ், போதை மாத்திரைகள் மற்றும் சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்டுகள் என்பன கைப்பற்றப்பட்டதாக நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம-7)

# கொழும்பில் மாயமான வல்வை இளைஞனொருவர் கடலில் சடலமாக மீட்பு

கொழும்புத் துறைமுக நகரக் கடற்பரப்பில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் பிரகாரம் சடலமாக மீட்கப்பட்டவர் வல்வெட்டித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த இளைஞர் கடந்த 28 ஆம் திகதி கொழும்புத் துறைமுக நகரத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்ததாகவும், அதன் பின்னர் அவரைத்தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இளைஞனின் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. (ம-7)

# காமேனி மரணம் மகிந்த அனுதாபம்

(கொழும்பு)

ஈரானின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநெஜாத் படுகொலை செய்யப்பட்ட செய்தி அதிர்ச்சி அளித்துள்ளதாக, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்தில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநெஜாத் இலங்கையின் நெருங்கிய நண்பராக செயற்பட்டதாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதன்படி சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய மேம்பாடு மற்றும் உமா ஓயா பல்நோக்கு திட்டம் ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கு அவர் முக்கிய பங்காற்றினார் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் வான்வழித் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதிநெஜாத் குடும்பத்தினருக்கும் மகிந்த தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இந்த அவசர நேரத்தில் அனைத்துத் தரப்பினரும் போரின் பாதையைத் தேர்ந்தெடுப்பதை விட நிதானத்தையும் பேச்சுவார்த்தையையும் கடைப்பிடிக்குமாறு மகிந்த ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

# எரிபொருள் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படாது

## முன்னாள் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

ஈரானிடம் இருந்து எண்ணெய் கிடைக்காவிட்டாலும் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசியல் காரியாலயத்தில் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே முன்னாள் ஜனாதிபதி ரணில் இதனைக் குறிப்பிட்டார்.

ஈரானை விட ஏனைய நாடுகளிலிருந்தே இலங்கை அதிகளவில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்ட ரணில், ஈரான் ஒருவேளை ஹோர்முஸ் நீரிணையில் எண்ணெய் கப்பல்கள் மீது குண்டுகளை வீசி, கப்பல் போக்குவரத்தைத் தடுத்தால் மாத்திரமே பிரச்சினை ஏற்படும் எனக் குறிப்பிட்டார்.

ஆனால் தற்போது வரை அத்தகையதொரு சூழல் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக இலங்கை செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

ஆக்கபூர்வமான, எண்ணங்களை உற்பத்தி செய்யும் பொழுது வாழ்க்கையின் ஓட்டம் எளிதாக இருக்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எரிபொருள் விநியோகத்தை நுட்பமாகக் கையாளுங்கள்

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது நடத்திய ஏவுகணைத் தாக்குதலை அடுத்து எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற ஊகத்தில், நாடு முழுமையிலும் உள்ள எரிபொருள் நிலையங்களில் மக்கள் வரிசை கட்டி நிற்கின்றனர்.

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் அறிவித்தாலும் எரிபொருளுக்கான வரிசை குறைந்ததாகத் தெரியவில்லை.

ஆயினும் எரிபொருள் நிலையங்கள் தொடர்ச்சியாக விநியோகப் பணியை மேற்கொண்டிருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

அதேநேரம் சில எரிபொருள் நிலையங்கள் **"பெற்றோல் முடிந்துவிட்டது"** என அறிவித்தல் பலகையைத் தொங்கவிட்டு, எரிபொருள் நிலையத்தை தடை செய்யப்பட்ட பிரதேசம் போல கயிற்றினால் எல்லைப்படுத்தி விடுகின்றன.

உண்மையில் பெற்றோல் முடிந்துவிட்டது என எரிபொருள் நிலையங்கள் அறிவித்தல் பலகையைத் தொங்கவிடுவதுதான் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டதோ என்ற மனக்கிலேசத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

நடைமுறையில் எரிபொருள் நிலையங்கள் தொடர்ச்சியாக எரிபொருளை வழங்குமாயின் – அதற்கேற்றவாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகத்தை விரைந்து செய்யுமாயின், எரிபொருள் நிலையங்களில் ஏற்படுகின்ற வரிசை இல்லாது போகும்.

அதேசமயம் வடபகுதியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் மக்கள் வரிசையில் நிற்கும்போது பொலிஸார் அங்கு பிரசன்னமாக இருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

ஆம், எரிபொருள் நிலையங்களில் பொலிஸார் பிரசன்னமாக இருப்பதன் காரணமாக அங்கு வரிசை ஒழுங்கு குலையாமல் பாதுகாக்கப்படுகிறது.

இதனால் அனைவரும் ஓர் ஒழுங்குமுறையில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

முன்பெல்லாம் எரிபொருள் நிலையங்களில் பொலிஸார் கடமையாற்றாத காரணத்தால், திட்டமிட்டு வரிசைகள் குழப்பப்பட்டு சண்டித்தனமுடையவர்கள் எரிபொருளை பெற்றுக் கொண்ட சம்பவங்கள் நடந்தன.

இதைவிட திட்டமிட்டே வரிசை குழப்பப்பட்டதனால், அப்பாவிப் பொதுமக்கள் எரிபொருளைப் பெற முடியாமல் ஏமாந்து போனதுடன் கறுப்புச் சந்தை வியாபாரமும் களை கட்டியது.

ஆக, காலம் உணர்ந்து பொலிஸார் கடமையாற்றுவது வரவேற்கப்பட வேண்டும்.

அதேநேரம் யுத்தம் நீளுமாக இருந்தால், **கியூஆர் கோட்** முறையை உடனடியாக அமுல்படுத்தி எரிபொருளை விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் 31 பேர் உயிரிழப்பு!

(பெய்ரூட்)

அணுசக்தி போட்டி காரணமாக ஈரான் மீது இஸ்ரேல்-அமெரிக்கா ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில், ஈரான் மீதான தாக்குதல்களுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. லெபனான் தலைநகர் பெய்ரூட் உட்பட அந்நாடு முழுவதும் இஸ்ரேல் தாக்குதல்களை தொடுத்தது. இந்த தாக்குதல்களில் 31 பேர் உயிரிழந்ததாகவும் 149 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக லெபனான் அரசு தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல்களுக்கு அந்நாட்டு ஜனாதிபதி ஜோசப் அவ்ன் மற்றும் பிரதமர் நவாப் சலாம் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள், லெபனானை பிராந்திய இராணுவ மோதல்களில் இருந்து விலக்கி வைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளைச் சீர்குலைப்பதாக ஜனாதிபதி அவ்ன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பிரதமர் நவாப் சலாம் இச்செயலை 'பொறுப்பற்றது' என விமர்சித்துள்ளதுடன், நாட்டின் பாதுகாப்பைக் கருதி அனைவரும் அமைதி காக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (3)

# INVITATION FOR BIDS 2026/01

## Puthukkkudiyiruppu Pradeshiya Sabha

1. The **Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.

2. Bidding will be conducted through **National Competitive Bidding.**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **Building and high way** for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million, The certificate of registration (PCA 03) shall be submitted with the bid" according to the Data Sheet**

4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.

5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 03/03/2026 until 15/03/2026 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 10/03/2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 16/03/2026 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | PSDG/NP/MU/PTKPS /2026/CWS/02 | Construction of Vehicle Shed for Water Bowser at Head Office | PSDG | 3.38 | 84 | C9 or above (Building) | 2000.00 | 03/05/2026 | 50,000.00 | 31/05/2026 |
| 02 | PSDG/NP/MU/PTKPS /2026/LAR/01 | Construction of Panainintran Road | PSDG | 4.22 | 84 | C8 or above (Highway) | 2000.00 | 03/05/2026 | 60,000.00 | 31/05/2026 |
| 03 | MA/NP/MU/PTKPS /2026/01 | Renovation Pandarikkulam Road (Alaikallu Podda Kulam) | Maintenance | 2.97 | 63 | C9 or above (Highway) | 2000.00 | 03/05/2026 | 40,000.00 | 31/05/2026 |
| 04 | MA/NP/MU/PTKPS /2026/02 | Renovation Mankulam Puthiya kolani Road | Maintenance | 2.12 | 63 | C9 or above (Highway) | 2000.00 | 03/05/2026 | 30,000.00 | 31/05/2026 |
| 05 | MA/NP/MU/PTKPS /2026/03 | Renovation Kuravil School Road | Maintenance | 1.7 | 63 | C9 or above (Highway) | 2000.00 | 03/05/2026 | 30,000.00 | 31/05/2026 |
| 06 | PSDG/NP/MU/PTKPS /2026/OS/02 | Construction of Burning Shed for Periyakulam Hindu Cemetery | PSDG | 1.09 | 63 | C9 or above (Building) | 2000.00 | 03/05/2026 | 20,000.00 | 31/05/2026 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:21 2291024, email: pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu on or before 10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**

8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu commencing at 10.30 A.M as stated in table above.**

9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha.**

(C-5102)

# ஈரானுக்கு எதிராக களம் இறங்க தயார்

## பிரிட்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி நாடுகள் கூட்டறிக்கை

(பரிஸ்)

அணுசக்தி போட்டி காரணமாக ஈரான் மீது இஸ்ரேல்-அமெரிக்கா ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவுடன் கைகோர்க்க தயாராக உள்ளதாக தெரிவித்து பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த கூட்டறிக்கையில், "எங்கள் நெருங்கிய கூட்டாளிகளை குறிவைத்து ஈரான் நடத்தும் பொறுப்பற்ற தாக்குதல்கள் பிராந்தியம் முழுவதும் உள்ள எங்கள் பொதுமக்களை அச்சுறுத்துகின்றன. இந்த பொறுப்பற்ற தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு ஈரானை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் நலன்களையும், பிராந்தியத்தில் உள்ள எங்கள் நட்பு நாடுகளின் நலன்களையும் பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நட்பு நாடுகளின் நலன்களை பாதுகாக்க ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவப் பயன்படும் தளங்களை அழிக்க தற்காப்புத் தாக்குதல்களை நடத்த தயார் என அந்நாடுகள் தெரிவித்துள்ளது. (3)

# மத்திய கிழக்கின் போர் எதிரொலி முடக்கப்பட்டது தங்க வர்த்தகம்!

டுபாயின் தங்க வர்த்தகம் மற்றும் விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், உலகின் முக்கியத் தங்க வர்த்தக மையமான டுபாயிலிருந்து தங்கம் வெளியேறுவது மற்றும் உள்ளே வருவது பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், சரக்குப் போக்குவரத்து விமானங்கள் நிறுத்தப்பட்டதாலும் இந்தத் தடை ஏற்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில், தங்க விநியோகம் தடைப்பட்டுள்ளதால், சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை அதிரடியாக உயரக் கூடும் எனப் பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாகச் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கான தங்கம் ஏற்றுமதி பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

திணைக்களத்தில் நேற்றுத் திங்கட் கிழமை (02) நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விசா நீடிப்புக்காக எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் கூறியுள்ளார். (ம-7)

## யாழ்.குடத்தனை...

நேற்றுத் திங்கட்கிழமை (02) காலை குறித்த வீட்டில் துர்நாற்றம் வீசிய நிலையிலேயே சடலம் கண்டுபிடிக் கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மருதங்கேணிப் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## ஈரானுக்கு...

பாட்டைப் பாதுகாப்பதில் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக சீனா அறிவித்துள்ளது.

ஈரானிய வெளிவிவகார அமைச்சருடனான உயர்மட்டப் பேச்சுவார்த்தையின்போது, சீன வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண நிலைமைகளுக்கு மத்தியில் ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீடுகளை நிராகரிப்பதாகவும் ஈரானின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் இராஜதந்திர ரீதியில் சீனா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் இந்தப் பேச்சுவார்த்தையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## 550க்கும்...

ஈரானின் சிறுமிகளுக்கான ஆரம்ப பாடசாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 165 பேர் உயிரிழந்துள்ளதாக ஈரான் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

ஒன்பது வைத்தியசாலைகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தாக்குதல்களில் பல நோயாளிகள் காயமடைந்துள்ளதாகவும் ஈரான் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் பேகி தெரிவித்துள்ளார்.

ஈரானில் சீனப் பிரஜை ஒருவரும் உயிரிழந்துள்ளதாக சீன வெளியுறவு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடங்கியதில் இருந்து இஸ்ரேலில் குறைந்தது 10 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு லெபனான் மற்றும் பெய்ரூட் மீதான இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களில் 31 பேர் உயிரிழந்துள்ளதாக லெபனான் பொது சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈரானின் பதிலடித் தாக்குதல்களில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் மூவர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

பஹ்ரைனின் சல்மான் தொழில் நகரத்தில் வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், குவைத்தில் மூன்று அமெரிக்க இராணுவ வீரர்கள் உயிரிழந்ததாக அமெரிக்க மத்திய கட்டளைப் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## அவசர காலநிலை...

சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் மற்றும் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் வரிசைகள் போன்ற சூழல்களைக் கருத்திற்கொண்டு, அவசரகால நிலையை மீண்டும் நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அவசரகால நிலையை நீடிப்பதற்கான உத்தியோகபூர்வ யோசனை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எரிபொருள் விநியோகம் மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கும் சட்டவிரோத எரிபொருள் சேமிப்புகளைத் தடுப்பதற்கும் இந்த அதிகாரம் அவசியமாகிறது எனத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு போர் காரணமாக நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

அவசரகால நிலை மீண்டும் அமுல்படுத்தப்பட்டால், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஊடாக எரிபொருள் விநியோகத்தை அரசாங்கம் மீண்டும் தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

## இஸ்ரேல்...

கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை விடுத்துள்ள அறிவிப்பின்படி, ரெல் அவிவ் நகரில் உள்ள இஸ்ரேல் பிரதமரின் அலுவலகம், ஹைஃபாவில் உள்ள இராணுவ மையங்கள் மற்றும் கிழக்கு ஜெருசலேமில் உள்ள இஸ்ரேலிய விமானப்படைத் தலைமையகம் ஆகியவற்றை இலக்குவைத்து கைபர் ரக ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன.

அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வெடித்துள்ள இந்தப் போர், தற்போது டுபாய், பஹ்ரைன், குவைத் மற்றும் ஈராக் எனப் பிராந்தியத்தின் பிற நாடுகளுக்கும் பரவியுள்ளது.

குவைத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கரும்புகை எழுந்ததுடன் சவுதியின் அராம்கோ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சைப்ரஸில் உள்ள பிரிட்டிஷ் விமானப்படைத் தளம் ஆகியவற்றின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (ம-7)

## காமே...

காயமடைந்திருந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

79 வயதான Mansoureh Khojasteh Bagherzadeh, அதி உயர் தலைவரை கொல்வதற்கு நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்து சுயநினைவிழந்திருந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய இஸ்ரேல் - அமெரிக்கா நடத்திய குறித்த தாக்குதலில் ஈரானின் அதிஉயர் தலைவர், அவரது மகள், மருமகன், பேரப்பிள்ளை மற்றும் தற்போது மனைவி ஆகியோர் உயிரிழந்துள்ளனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 6121
N 8 1 0 8 5 5
அத சம்பத
N 0 8 5 5
சீட்டிழுப்பு இலக்கம் 0696

சுப தவசக்
திகதி 2026.03.02
0237
மேடம் 36 55 64
3281

தன நிதானய
திகதி - 2026.03.02
சீட்டிழுப்பு இலக்கம் - 2151
K 04 16 25 75 K

மெகா பவர்
திகதி 02/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2469
Y 18 06 25 44 49

ஜய
திகதி 2026.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 0389
W 0 3 5 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4363
சீட்டிழுப்பு திகதி 02.03.2026
C 37 44 47 75
C

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.02
சீட்டிழுப்பு இலக்கம் 1430
மிதுனம் 01 32 43 48 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
02.03.2026 வெற்றி வாரம் 0829
K 0 5 9 3 1 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,647,962.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3095
சீட்டிழுப்பு திகதி 2026.03.02 தினம் திங்கட்கிழமை
04 23 35 42 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 103,211,799.20

சனிதா
திகதி 02.03.2026 வெற்றி வாரம் 5256
26 42 57 69 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,245,049.60

சசிரி
வெற்றி வாரம் 925
சீட்டிழுப்பு திகதி 02.03.2026 திங்கட்கிழமை
20 22 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,910,960.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4807
சீட்டிழுப்பு திகதி 02.03.2026 தினம் திங்கட்கிழமை
06 33 34 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,245,120.00

கப்ருக
2271
02.03.2026 திங்கட்கிழமை
M 28 37 49 51 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.170,087,554.00

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2921
சீட்டிழுப்பு திகதி: 2026.03.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.95,900,956.80
14 27 36 73 K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.2 மில்லியன் லீற்றர் எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)

நாட்டில் நேற்று காலை வரையான நிலவரப்படி சுமார் 5.2 மில்லியன் லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாக நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்தில், பொதுமக்கள் அதிகளவில் எரிபொருளைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக் காலை 9.44 மணி வரையான காலப்பகுதிக்குள் மட்டும் சுமார் 5.2 மில்லியன் லீற்றர் எரிபொருள் நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதில் 2,325,349 லீற்றர் டீசலும் 2,904,000 லீற்றர் பெற்றோலும் அடங்குவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எரிபொருள் நிலையங்களில் நிலவும் நீண்ட வரிசைகளைக் கட்டுப்படுத்தவும் கறுப்புச் சந்தையில் எரிபொருள் விற்கப்படுவதைத் தடுக்கவும் கான்கள் மற்றும் போத்தல்களில் எரிபொருள் வழங்குவதற்கு உடனடித் தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருள் அளவு குறித்துத் தெளிவுபடுத்தியுள்ள அதிகாரிகள், நாட்டில் பெற்றோல் 37 நாட்களுக்கும் டீசல் 35 நாட்களுக்கும், சூப்பர் டீசல் 72 நாட்களுக்கும் மற்றும் விமான எரிபொருள் 47 நாட்களுக்கும் போதுமான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ம-7)


## மாப்பிள்ளை தேவை

01. புன்னாலைக்கட்டுவன், இந்து, 1990, புனர்பூசம், Bussiness and Finance Degree (UK), Cordinator (Hospital), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (37878)
02. புங்குடுதீவு, இந்து, 1991, திருவாதிரை, Bussiness Magement Manager, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56329)
03. வேலணை, இந்து, 1992, பூரம், BSc (Hons) Nutrition, PHD in public Health - Nutrition, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளைக்கு தேவை. (57553)
04. உடுப்பிட்டி, இந்து, 1993, ரேவதி, Bachelor of Engineering (Auckland), Electrical Engineer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53766)
05. பருத்தித்துறை, இந்து, 1994, உத்தரம், MBBS, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (34635)
06. கிளிநொச்சி, இந்து, 1995, ரேவதி, Medicine Colombo University, MBBS, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54455)
07. கீரிமலை, இந்து, 1996, உத்தரம், BSc, MSc Toxicologist (Researcher), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30340)
08. இணுவில், இந்து, 1987, உத்தரம், Chemical Engineering, Engineer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (25339)
09. தெல்லிப்பளை, இந்து, 1988, மிருகசீரிடம், BSc (Hons) Software Engineering, MBA, Computer Engineering, canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (31812)
10. புங்குடுதீவு, இந்து, 1989, புனர்பூசம், Masters in Psychology (Norway), Psychology Advisor, Norway Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35482)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (2090)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

## SUBRA (14)

சித்தன்கேணி

A/L - 2028 வர்த்தகப் பிரிவு

ஆரம்பம் : 06.03.2026
வெள்ளி 04.00 pm

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

பொருளியல் : S.ஜெயகுமார்
கணக்கீடு : S.தவா
வணிகக்கல்வி : S.K.பாலசபேஷ்
தகவல்தொழில்நுட்பம் : T.கவாஸ்கர்

தொடர்புகளுக்கு
077 723 8597/ 077 674 0450 (C-5105)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5108)
076 825 7716 (ஆகாஸ்)

## விற்பனைக்கு

MIBG 4 அரச சான்றிதழ் பெற்ற விதை உழுந்து செடி வர்த்தகம் விற்பனைக்கு. (6945)

021 205 4809
077 529 2951

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg

DELIVERY ➤ 2-3 Months

எமது நேரடி கிளைகள்
திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், நெல்லியடி (C-5106)

V2 TRAVELS
076 822 6244
076 455 0672

## வீட்டுப் பணிப்பெண் தேவை

எங்கள் வீட்டிற்கு வீட்டு வேலைகளை செய்து குழந்தைகளையும் பராமரிக்க நம்பிக்கையான 45 வயதிற்குட்பட்ட பெண்மணி தேவை. (2107)

077 459 7938

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (6964)

076 889 1308
077 606 1333

# K.P.C

இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

A/L - 2028 வர்த்தகப் பிரிவு

ஆரம்பம் : 06.03.2026
வெள்ளி 03.00 pm (6967)

பொருளியல் : S.Jeyakumar
கணக்கீடு : A.T.Suren
வணிகக்கல்வி : T.S.Richi

தொடர்பு : 077 723 8597


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்.கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சவுதி அரேபியா, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்)

எம் அருமை அப்பா!
எம்மைவிட்டு எங்கு சென்றீரோ!
எங்களை விட்டு பிரிந்திடவே
உங்களுக்கு என்றும் மனம் வராதே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானடைந்து இரண்டு ஆண்டு
ஆனாலும் ஆறாது உங்கள் பிரிவுத் துயர்!

எங்களை எல்லாம் அன்பாலும்
பண்பாலும் அரவணைத்து
வழிநடத்திய அந்த நாள்
எங்களை விட்டு நீண்ட தூரம்
சென்றாலும் உங்கள் அறிவுரைகள்
அரவணைப்புக்கள் என்றும் எங்கள்
நெஞ்சங்களில் உயிர்வாழும்
அப்பா என்ற சொல்லுக்கு
நீங்களே இலக்கணம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,
தாவடி, கொக்குவில். (6963)

தகவல்:-
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 191 பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org